நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## S.T.C. No. 733 /2024

## P.W. 3 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | தவமணி |
| தந்தை / கணவர் பெயர் | : | சின்னுபடையாச்சி |
| கிராமம் | : | கணக்குப்பட்டி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 3 |
| வயது | : | 63 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜனவரி மாதம், 23–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது அலுவல் கூட்டத்திற்கு சென்று விட்டதாக தெரிவிக்கப்பட்டதுள்ளதாலும், சாட்சி ஆஜரில் இருப்பதை கருத்தில் கொண்டு இந்த நீதிமன்றம் தாமாக முன்வந்து சாட்சியை பதிவு செய்கிறது.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.24PM.

1. நான் தற்போது கணக்கம்பட்டி பிரிவில் குடியிருந்து விவசாயம் மாடு வியாபாரம்

செய்து வருகிறேன். இந்த வழக்கில் அ.சா.1 சேதுவராயன் எனது தம்பி மகன் ஆவார். இந்த வழக்கின் எதிரிகளான மாரியம்மாள் தரப்பினர் எனக்கு உறவினர் ஆவார்கள். 04.07.2022ம் தேதி காலை 9.30 மணிக்கு பழக்காரனூரில் உள்ள சேதுவராயன் நிலத்தின் வழியாக மாடு வாங்குவதற்காக என்னுடைய இரு சக்கர வாகனத்தில் நான் சென்று கொண்டிருந்த போது மாரியம்மாளும், மாரியம்மாளின் பசங்களும் ராமலிங்கம், திருநாவுக்கரசு, அவரது அண்ணன் மகன் பெரியண்ணன் ஆகியோர் சத்தம் போடுவது கேட்டது.

2. அந்த இடத்தை நோக்கி நான் பார்த்தபோது அங்கிருந்த 1வது எதிரி மாரியம்மாள் சேதுவராயன், அவருடைய குமுதவள்ளி ஆகிய இருவரும் கண்டாரஓலி,ஆயா, அம்மா என்ற கெட்ட வார்த்தைகளால் திட்டி கொண்டிருந்தார். பதிலுக்கு சேதுவராயன் தரப்பினரும் அதுபோல் பேச மாரியம்மாள் குமுதவள்ளியின் தலை முடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி எட்டி உதைத்துவிட்டார். அதனை பார்த்த சேதுவராயன் சென்று தடுத்தார். தடுத்ததை பார்த்து கோபம் கொண்ட திருநாவுக்கரசு மற்றும் ராமலிங்கம் ஆகிய இருவரும் ஆளுக்கொரு கட்டையை வைத்து சேதுவராயனை தாக்கி கன்னத்திலும், வலது கைமீதும் அடித்து காயம் ஆகிவிட்டது. உடம்பில் அடித்ததனால் காயம் ஏற்படவில்லை.

3. அதன்பிறகு சண்டை போட்டு கொண்டு நான் சமாதானம் செய்து வைத்து விட்டு வந்துவிட்டேன். ஆனால் அவர்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க செல்வதாக சொன்னார்கள். அதன்பிறகு 05.07.2022ம் தேதி போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து இருப்பதாக எனது தம்பி மகன் தமிழ்செல்வன் போன் செய்ய மதியம் 2.30 மணிக்கு அங்கு சென்றேன். அங்கு வந்த உதவி ஆய்வாளர் சம்பவம் எவ்வாறு நடந்தது என்று என்னிடம் விசாரித்தார். மேலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். அதற்கு சாட்சியாக இருக்க கேட்டதால் நானும், அப்போது அங்கிருந்த எனது அண்ணன் பேரன் ராகுல் காந்தியும் பார்வை மகஜரில் சாட்சி கையெழுத்து செய்தோம். (**என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் முதலாவது கையெழுத்து என்னடையதுதான் அதில் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. இந்த சம்பவம் தொடர்பாக மாரியம்மாள் குமுதவள்ளி மீது கொடுத்த சிசி.எண். 256/2024 என்ற வழக்கில் நான் சாட்சி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான்மேற்படி சாட்சியம் அளிக்கும்போது சம்பவத்தை பற்றி எனக்கு தெரியாது என்றும், நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது வீட்டில் இருந்து சம்பவ இடம் 100 மீட்டர் தொலைவில் உள்ளது. சம்பவம் தொடர்பாக யாரும் எனக்கு போன் செய்து சொல்லவில்லை. நான் அந்த வழியாக சென்று கொண்டிருந்தேன்.
2. நான் சத்தம் கேட்டுதான் சம்பவ இடத்திற்கு சென்றேன். நான் சம்பவ இடத்திற்கு நான் போகவதற்கு முன்னால் அந்த இடத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. சம்பவம் நடைபெற்ற இடம் தனி நபருக்கு சொந்தமானது என்றால் சரிதான். அது பொது இடம் இல்லை என்றால் சரிதான். சம்பவம் அய்யானார் கோவிலுக்கு தெற்கு பக்கம் 50 அடி தூரத்தில் விவசாய நிலத்தில் சம்பவம் நடைபெற்றது.
3. சம்பவ இடத்தை சுற்றி 4,5வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் ஒரு அரை மணிநேரம் நடைபெற்றது. நான் சண்டையை விலக்கிவிடவில்லை. வேடிக்கை தான் பார்த்தேன். சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு சம்பவ இடத்திற்கு அருகில் இருக்கும் 5 வீட்டார்கள் யாரும் வரவில்லை. அதுபோல் எனது சொந்த பந்தம் யாரும் அங்கு வரவில்லை. கலையரசி எனது மனைவி ஆவார். கோவிந்தராஜ் எனது சகோதரர், மணிவண்ணன் எனது அண்ணன் மகன்ஆவார். ராகுல் காந்தி எனதுபேரன் ஆவார்.
4. சம்பவம் முடிந்து காவல் நிலையம் செல்கிறேன் என்று கூறி சென்றுவிட்டார்கள். அதன் பிறகு அவர்கள் காவல் நிலையம் சென்றார்களா இல்லையா என்று எனக்கு தெரியாது. நான் வீட்டிற்கு சென்று விட்டேன். காவல் உதவி ஆய்வாளர் மற்றும் ஒரு போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தனர். நான் செல்லும் முன் அவர்கள் அங்கு இருந்தனர். நான் சொன்ன மேற்படி சொன்ன சம்பவ இடத்தில் தான் இருந்தார்கள்.
5. போலீசார் படம் வரைந்தார்களா என்றால் வரைந்தார்கள். படம் வரைந்த தாளில்தான் கையொப்பம் செய்தீர்களா என்றால் ஆமாம். படம் வரைந்த பேப்பரில் நான் கையெழுத்து போட்டேன். அதன் பிறகு யார் கையெழுத்து போட்டார்கள்

என்று எனக்கு தெரியாது. ராஜீவ் காந்தி கையெழுத்து போட்டதாக சொன்னார்கள்.

6. என்னிடம் இரண்டு கையெழுத்து வாங்கினார்கள். படம் வரைந்தது ஒரு கையொப்பமும் , எழுதி வாங்கியதில் ஒரு கையொப்பமும் வாங்கி கொண்டார்கள். குமுதவள்ளி தரப்பினர் எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் நான் பார்க்காத ஒரு சம்பவத்தை நான் நேரில் பார்த்தாக அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் நான் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் ஏற்கனவே இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தபோதும், இன்று முதல் விசாரணையின்போதும் சரியான மற்றும் முழுமையான சங்கதிகளை குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–01.59PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**